# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்

க. கோபால கிருஷ்ணன், B.E.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.
எண்.43/397A. இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி – 044-27665657.
email-tvlrregion@gmail.com

பெறுநர்

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
அகரம் ஊராட்சி,
திருவள்ளூர் வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**ந.க.எண்.1182/2017/திவம2** **நாள்.31.08.2018**

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - அகரம் கிராமம் - சர்வே எண்கள்.16/1A2, 24/1, 3-ல் 5.74 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம், ந.க.எண்.1188/17/அ6, நாள்.29.08.2017.
2. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.06.2003.
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/ 1988-பிசிசி, நாள்.27.04.1988.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/ 1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
8. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.1182/2017/திவம2, நாள்.12.10.2017. (சாலைகள் மற்றும் பூங்கா ஒப்படைக்க கோரியது).
9. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம், நாள்.31.11.2017 (தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்றத் தீர்மானம் பெறப்பட்டது).
10. திருவள்ளூர் வட்டாட்சியர் அவர்கள் கடிதம், மூ.மு.எண்.22859/15/அ1, நாள்.07.08.15.
11. மனுதாரர் திரு.U.Jayachandran அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள், நாள்.17.07.2018. (நன்னிலைவரி கட்டணம் செலுத்தியது).
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.16091/2016/MP1, நாள்.11.05.2017.
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
14. வேளாண்மை இணை இயக்குநர்(பொ), திருவள்ளூர் அவர்களின் கடித எண்.மாதி4/7050/17, நாள்.30.08.2017.

********

NOTARY PUBLIC ★ GOVT OF TAMIL NADU
R. KRISHNAMURTHY CHENNAI G.O.Ms. No.



Scanned by CamScanner

1. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் கிராமம், சர்வே எண்கள்.16/1A2, 24/1, 3-ல் 5.74 ஏக்கர் இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கு, பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.உ.இ(திவம)எண்.404/2018** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 9-ல் காணும் கடிதம் மூலம் சாலைகள் மற்றும் பூங்கா உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்ற தீர்மான நகல் ஆகியவை பெறப்பட்டுள்ளது. மேலும், பார்வை 11-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.48,600/- (ரூபாய் நாற்பத்து எட்டாயிரத்து அறுநூறு மட்டும்)** செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

4. மேலும் பார்வை 3, 4, 5 மற்றும் 6-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 2-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. பார்வை 9-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

NOTARY PUBLIC R. KRISHNAMURTHY CHENNAI CITY



Scanned by CamScanner

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. பார்வை 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. பார்வை 12-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்சித் துறை ந.வ.4(3), நாள் .4.5.2017-ல்,

a) இனம் 3-ல் மேற்படி மொத்த மனைப்பிரிவு இடத்திற்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக உள்ளாட்சி பெற்றுக் கொண்டும்,

b) இனம் 9-ன்படி, "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development." என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனையின் பரப்பிற்கு 3% சந்தை மதிப்பு (Market value of land) தொகையை அரசுக் கணக்கில் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

3. பார்வை 13-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

31/8/18

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.

**இணைப்பு :** வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்)

31.8.18

**நகல்**

1. Thiru.U.Jayachandran,
   No.10, W-ICC B Sector,
   5th Street, Anna Nagar Ext.,
   Chennai – 101.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2
   அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
   மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
   திருவள்ளூர் மண்டலம்.
   மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

NOTARY PUBLIC ★ GOVT OF TAMIL NADU

Scanned by CamScanner

தனி அலுவலர் / கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.இரா.ஸ்டாலின்

ந.க.எண் 2979/2018/அ7 நாள்: 27.09.2018.

பொருள்: மனைப்பிரிவு - கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - புதுமாவிலங்கை ஊராட்சி - சர்வே எண்:16/1A2, 24/1, 3-ல் 5.74 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு - நகர் ஊரமைப்புத் துறையால் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டது - ம.வ/ந.ஊ.உ.இ(திவம) எண்:404/2018 - மனைகளை வரன்முறை செய்து உத்தரவிடல்.

பார்வை:

1. அரசாணை எண்:78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, ந.வ.4(3), நாள்:04.05.2017.
2. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3), நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொ), திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்:1182/2017/திவம2, நாள்:31.08.2018.
4. புதுமாவிலங்கை ஊராட்சித் தீர்மான எண்:48 நாள்:26.09.2018.

********************

உத்தரவு:

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சி, சர்வே எண்:16/1A2, 24/1, 3-ல் 5.74 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களால் "ம.வ/ந.ஊ.உ.இ(திவம) எண்:404/2018" என்ற எண்ணில் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் பார்வை 3ல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு 23229.00 சதுர மீ பரப்பில் அமைந்துள்ளது. இதில் மொத்தம் 160 மனைகள் உள்ளன. (71 முதல் 86 வரை, 99 முதல் 118 வரை EWS மனைகளாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவில் 25288.00 சதுர அடி பரப்புள்ள பூங்கா. சாலை 65194.00 ச.அ கொண்ட பரப்பளவு புதுமாவிலங்கை ஊராட்சிக்கு தானப்பத்திரப்பதிவு செய்து தரப்பட்டுள்ளது. (பதிவு எண்:1606/2017 நாள்:30.10.2017 இவ்விவரம் புதுமாவிலங்கை ஊராட்சித் தீர்மான எண்:32 நாள்:03.11.2017-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்குக் கீழ்கண்ட விவரப்படி மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. மேற்படி மனையின் பரப்பிற்கு 3% சந்தையின் மதிப்பு அரசு கணக்கில் SBI வங்கி AD Branch திருவள்ளூர் செலான் எண்:211,212,214,215 நாள்:26.09.2018 ரூ.196200/- செலுத்தப்பட்டுள்ளது.



NOTARY PUBLIC ★ GOVT OF TAMIL NADU

Scanned by CamScanner

2. மேற்படி மனைக்கு கூர்ராய்வு கட்டணமாக 1X1000=1000 பல்வகை ரசீது எண்:5403 நாள்:20.06.2018-ல் செலுத்தப்பட்டுள்ளது.
3. கொடி நாள் வசூல் ரூ.15000/- காசோலை எண்:238174 நாள்:28-09-2018

மேற்காணும் விரவங்களின்படி பதுமாவிலங்கை ஊராட்சி தீர்மானம் எண்:48 நாள்:26.09.2018 பார்வையில் காணும் 4-ன்படி வழங்கப்பட்டுள்ள ஊராட்சி அங்கீகாரத்தின்படியும் இம்மனைப்பிரிவிலுள்ள மனைகளையும் பின்வரும் நிபந்தனைகளுக்குப்பட்டு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

**கீழ்க்கண்ட நிபந்தனைகள் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும்.**

1. ஒப்புதல் வழங்கும் நாளில் நில ஆர்ஜிதம் எதும் இல்லாததால் இதற்கான ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தில் வரிசை எண்:2ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்படவேண்டும். இதற்குப்பட்டே அனுமதி வழங்கப்படுகிறது.
3. நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தில் வரிசை எண்:3,4-ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.
4. இந்த மனைப்பிரிவில் வரன்முறைப்படுத்தப்பட்ட மனையில் அமையும் கட்டிடம் வரன்முறைப்படுத்தியதற்கு பொறுப்பாகாமை ஆகும். எனவே வரிமையாளர் அவரால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு ஊராட்சியிடம் விதிமுறைகளின்படி கட்டிட அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும்.
5. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, ந.வ.4(3), நாள்:13.10.2017-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் சொல்லப்பட்ட OSR-க்கான GiftDeed பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.
6. EWS பெருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்காக ஒதுக்கப்பட்டது. இம்மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.
7. இம்மனைபிரிவின் வழியே செல்லும் குறைந்த மின் அழுத்த மின் கம்பி பாதையினை மனுதாரர் தங்கள் சொந்த செலவில் உத்தேச மனைப்பிரிவின் சாலை போக்கில் மாற்றி அமைக்க வேண்டும்.
8. செலுத்தப்பட்டுள்ள கட்டணங்களில் வித்தியாசத்தொகை ஏதேனும் செலுத்த வேண்டியதாகப் பின்னர் அறியப்பட்டால் அதனை மனைப்பிரிவு உரிமையாளர் செலுத்தவேண்டும்.

NOTARY PUBLIC ★ GOVT. OF TAMIL NADU ★ R. KRISHNAMURTHY CHENNAI CITY G.O.MS. No. 140/17

Scanned by CamScanner

9. இறுதி உத்தரவு வழங்கப்படும் இம்மனைப்பிரிவு தொடர்பாக நில உரிமை குறித்தோ இன்ன பிற காரணங்களலேயோ நீதி மன்றத்தில் ஆட்சேபணை தெரிவிக்கும் பட்சத்தில் இவ்வுறுதி உத்தரவ எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

34

இணைப்பு:

1. பார்வை 3-ல் காணும் கடித நகல்.
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்-1

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

27.9.18.

பெறுநர்:

Thiru.U.Jayachandran,
No.10, W-IC B Sector,
5th Street, Anna Nagar Ext.,
Chennai – 101.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம்,
   எண்:43/397A, 2வது தளம், அன்னை இந்திரா காந்தி சாலை,
   இராஜாஜிபுரம் பகுதி-2, திருவள்ளூர்-602001.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், பேரம்பாக்கம்.
3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்.
4. வட்டாட்சியர், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
5. தனி அலுவலர், கடம்பத்தூர் ஊராட்சி
   (இணைப்பு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்-1)

NOTARY PUBLIC ★ GOVT. OF TAMIL NADU ★
R. [illegible]MURTHY
CHENNAI CITY

Scanned by CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate